# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண்.**406/2012 C/W OS.53/2010

பெயர்: **அழகம்மாள்** நாள்: 08.04.2025

பி.வா.சா.2 – வாதி தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.2 – அழகம்மாள் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம் : 11.25

எனது மாமனார் பெயர் ஐம்புலிங்கம். எனது மாமனாருக்கு 4 மகன்கள். அதில் மூத்தவர் எனது கணவர் ராமசாமி ஆவார். இரண்டாவது மகன் பெயர் பூமலை, 3 வது மகன் பெயர் நடராஜன் மற்றும் 4 வது மகன் பெயர் நடேசன். எனது கணவர் மற்றும் நடேசன் அண்ணன் தம்பி ஆவார். நடேசன் அமெரிக்க நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் பணிபுரிந்து வருகிறார். அவர் வேலை செய்த காலத்தில் தான் இந்த தாவா சொத்துக்கள் வாங்கப்பட்டனவா என்றால், ஆமாம். இந்த தாவா சொத்து எத்தனை சதுரடிகள் என்றால் 10200 சதுரடிகள். இந்த 10200 சதுரடிகள் 2 பத்திரங்களாக எழுதப்பட்டுள்ளனவா என்றால், ஆமாம். ஒரு 5100 சதுரடிக்கு உண்டான பத்திரம் எனது கணவர் பெயரிலும் மீதமுள்ள 5100 சதுரடிக்கு உண்டான பத்திரம் நடேசன் பெயரிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த பத்திரத்தில் 5100 சதுரடி வடக்கு பக்கம் எங்களுக்கும் தெற்கு பக்கம் 5100 சதுரடி நடேசனுக்கும் பதிவு செய்யப்பட்டது. வடக்கு பக்கம் உள்ள 5100 சதுரடிக்கு எங்கள் பெயரில் பட்டா உள்ளது. தெற்கு பக்கம் மீதமுள்ள 5100 சதுரடி நடேசன் பெயரில் பட்டா உள்ளது. 5100 சதுரடியை மையமாக வைத்து வடக்கு பக்கம் ஒரு வீடும் தெற்கு பக்கம் ஒரு வீடும் கட்டப்பட்டுள்ளதா என்றால், ஒரே வீடாக கட்டப்பட்டுள்ளது. நடுவில் ஒரே வாசற்படியாக வைத்து வீடு கட்டப்பட்டுள்ளதா என்றால், ஒரே வீடாக தான் உள்ளது. இரண்டு வீட்டையும் இணைக்கும் படி ஒரு

வாசற்படி உள்ளதா என்றால், இல்லை. நடுவில் சுவர் இல்லை. தனித்தனி கதவுகள் தான் உள்ளது. வடக்கு பக்கம் 3 கதவுகளும் தெற்கு பக்கம் 1 கதவும் உள்ளது. ராமசாமி என்பவர் எப்படி இறந்தார் என்றால், மோட்டார் வாகன விபத்தில் இறந்தார். இறந்து போன கணவருக்கு யார் யார் வாரிசு என்றால் என் மகள், என் மகன் மற்றும் நான். இந்த பிரமாணப்பத்திரிக்கையில் இந்த வழக்கை நான் எனக்காகவும், இதர பிரதிவாதிகளுக்காகவும் தாக்கல் செய்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேன். மற்ற பிரதிவாதிகள் யார் யார் என்றால், எங்கள் 3 பேர்களுக்காகவும் நான் சொல்கிறேன். என் மகன் மற்றும் மகள் அமெரிக்காவில் உள்ளனர். அவர்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்களா என்றால், இல்லை. என் மகளுக்கு யாரை வழக்கறிஞராக நியமித்துள்ளேன் என்றால், யாருமில்லை. எனவே அவர்களுக்காக நான் சாட்சி சொல்ல முடியாது என்றால், சொல்லமுடியாது. என் மகனுக்கு யாரை வழக்கறிஞராக நியமித்துள்ளேன் என்றால், யாருமில்லை. அதனால் மற்ற பிரதிவாதிகளுக்காக நான் சாட்சி சொல்ல முடியும் என்று சொல்வது தவறான கருத்து என்றால், சாட்சி சொல்ல முடியாது. இந்த 10200 சதுரடியில் வீடு கட்டும்போது அமெரிக்காவில் இருக்கும் நடேசன் பணம் அனுப்பினாரா என்றால், இல்லை. பணம் அனுப்பாத நடேசன் மீது கிரைய பத்திரம் எப்படி எழுதப்பட்டது என்றால், அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க கிரைய பத்திரம் எழுதப்பட்டது. ஆனால் பணம் கொடுக்கப்படவில்லை. பணம் கொடுக்கமால் 5100 சதுரடியை அவர் மீது ஏன் எழுதினீர்கள் உங்கள் பெயரில் எழுதி இருக்கலாம் என்றால், மனிதாபிமான அடிப்படையில் எனது கணவர் தம்பி பெயரில் எழுதி வைத்துள்ளார். அந்த பத்திரம் செல்லாது என்று வழக்கு தொடுத்துள்ளேனா என்றால், இல்லை. அதேபோல் இந்த சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் சங்ககிரி கிராமத்தில் உள்ளது. சர்வே எண், பட்டா எண் மற்றும் கதவு எண் என்னவென்று தெரியுமா என்றால், தெரியாது. நீங்கள் உங்கள் கணவர் இறந்த

சமயத்தில் நடேசன் மீது என்ன பரிகாரம் கோரி வழக்கு (OS.53/2010) தொடுத்துள்ளேன் என்றால், அண்ணன் தம்பிக்கு இடையில் உள்ள பிரச்சனை பற்றி எனக்கு தெரியாது. தற்போது நீங்கள் வாரிசு என்ற முறையில் என்ன பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளீர்கள் என்றால், சொத்து முழுவதும் எங்கள் சுவாதீனத்தில் உள்ளதால் 10200 சதுரடி முழுவதும் எங்களுக்கு சாதகமாக வேண்டி வழக்கு தொடுத்துள்ளேன். நீங்கள் சொல்வது போல் அனுபவபாத்தியம் மூலம் வழக்கு தாக்கல் செய்யவும் இல்லை. அதன்படி பரிகாரம் கிடைக்கத்தக்கதும் இல்லை என்றால், சரியல்ல. அதே போல் நடேசன் என் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 5100 சதுரடி அவருக்கே உரிமை என்று தாக்கல் செய்துள்ளார். நடேசன் 5100 சதுரடி கேட்பதற்கு அவருக்கு பட்டா உள்ளது. ஆனால் நீங்கள் 10200 சதுரடிகள் கேட்பதற்கு உங்களிடம் பட்டா உள்ளதா என்றால், பரிதாபத்தின் பெயரில் பாதி பட்டா நடேசன் பெயரிலும் மீதி பட்டா என் கணவர் பெயரிலும் பதியப்பட்டது . என் கணவர் பெயரில் மின் இணைப்பு உள்ளது. அது என் வீட்டின் வடக்கு பக்கம் உள்ளது. வடக்கு பக்கம் ஒதுக்கப்பட்ட வீட்டில் கணவர் பெயரில் மின் இணைப்பு உள்ளதா என்றால், ஒரே வீட்டில் வடக்கு பக்கம் என் கணவர் பெயரில் மின் இணைப்பு உள்ளது. தெற்கு பக்கம் ஆழ்துளை கிணறு போடப்பட்டுள்ளதா என்றால், ஆமாம். அந்த ஆழ்துளை கிணறு நடேசன் போட்டாரா என்றால், இல்லை என் கணவர் ராமசாமி போட்டார். இந்த ஆழ்துளை கிணற்றை வடக்கு பக்கம் போட்டிருக்கலாம் என்றால், தெற்கு பக்கம் தான் தண்ணீர் இருந்தது. அதனால் அங்கு போடப்பட்டது. தெற்கு பக்கம் நடேசனுடைய இடம் அதில் ஆழ்துளை கிணறு போட உரிமையில்லை. அதனால் அது நடேசன் போட்டது என்றால், இல்லை. எனது கணவர் தான் ஆழ்துளை கிணறு போட்டார். அதன்பிறகுதான் வீடுகள் கட்டப்பட்டன. இந்த தாவா வழக்கை நடேசன் அண்ணன் மகன் சுரேஷ் என்பவர் முன்னின்று நடத்தி வருவது எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியும். நடராஜன்

குடும்பத்தார் நாங்கள் வசிக்கும் இடத்தின் பக்கம் தான் வசிக்கிறார்களா என்றால், ஆமாம். தற்போது வீட்டைச் சுற்றியுள்ள காம்பவுண்ட்டில் 2 கேட்டுகள் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஒன்று என் கணவர் உயிரோடு இருக்கும் போதே எடுக்கப்பட்டது. இந்த வீட்டிற்கு நடேசன் அவ்வப்போது வந்து செல்வாரா என்றால், அண்ணாமலை பூமலை என்பவர்கள் வந்தார்கள். அவர்கள் நடேசன் என்பவரிடமிருந்து அதிகாரம் பெற்றவர்கள். அவர்கள் வரும்போது அடியாட்களுடன் வந்தார்கள். அப்படி அடியாட்களுடன் வந்தார்கள் என்பதை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் சொல்வது தவறு அவர்கள் அவ்வப்போது அங்கு வந்து தங்கியிருந்தார்கள் நடேசனை பார்க்க அடியாட்களும் வந்தார்கள் என்று சொல்வது தவறு என்றால், இல்லை அடியாட்களுடன் வந்தார்கள். உங்களை பொறுத்தவரை 10200 சதுரடிக்கு 2 பட்டா மூலம் பதியப்பட்டதா இல்லை ஒரு பட்டா மூலம் பதியப்பட்டதா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. 5100 சதுரடிக்கு ஒரு பட்டாவும் மீதமுள்ள 5100 சதுரடிக்கு மற்றொரு பட்டா இருப்பதால் நீங்கள் 10200 சதுரடிக்கு உரிமைகோர முடியாது என்றால், சரியல்ல. உங்கள் பெயரில் உள்ள பட்டாவை மட்டும் தான் உரிமை கோர முடியும் என்றால், 10200 சதுரடியில் நாங்கள் அனுபவத்தில் இருந்து வருகிறோம். 5100 சதுரடி பத்திரமும் பட்டாவும் வீட்டு வரி இரசீதும் நடேசன் அனுபவத்தில் உள்ளதா என்றால், இல்லை. நடேசன் பெயரில் பாத்தியப்பட்டது என்றும், அவருக்கு விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோர உரிமை உள்ளது என்று சொன்னால், சரியல்ல. உங்களுக்கு 5100 சதுரடியில் மட்டும் தான் உரிமை உள்ளது. மீதமுள்ள 5100 சதுரடி நடேசனுக்கு உரிமை உள்ளது அதனால் அவர்கள் விளம்புகை பரிகாரம் கோருவது சரிதானா என்றால், சரிதான். என் மகளும் மகனும் அமெரிக்காவில் உள்ளார்கள். நடேசன் அவர்களை அழைத்து சென்றார்களா என்றால், இல்லை அவர்களாக தான் சென்றார்கள்.

இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் நீதிமன்றத்திலிருந்து நீதிமன்ற ஆணையர் வந்து பார்த்தார்களா என்றால், பார்த்தார்கள். அதேபோல் வீட்டு வரி இரசீது மின் இணைப்பு இரசீது எனது கணவர் பெயரில் உள்ளதை மட்டும் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், சரிதான். நீங்கள் 5100 சதுரடியை வைத்துக் கொண்டு 10200 சதுரடியை அனுபவத்தை தடுக்க கூடாது என்று சொன்னால், சரியல்ல. அதனால் OS.406/2012 வழக்கை அனுமதித்தும் OS.53/2010 வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால், சரியல்ல. எனது மகள் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சி சொல்லாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் : 12.25

ஒப்பம்/அழகம்மாள்

ஒப்பம்/திருமதி.R.இளமதி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.